ஊராட்சி படிவம் எண் : 6

பல்வகை வரவு ரசீது

1433

அசல்

பற்றுச் சீட்டு எண்.

புத்தக எண்.

நாள் : 06-03-2024

தம்மனூர் ஊராட்சி

திரு. [illegible] கிராமம் எண்: 15/4g தேருநர் 12 வது வரிசை எண்பவரிடமிருந்து

ரூபாய் 4,000/- (ரூபாய் நான்காயிரம் மட்டும்) அல்லாதிடம் எதிர்வரை-49

தம்மனூர் ஊராட்சி வகைக்காக பெற்றுக்கொள்ளப்பட்டது. முன்னாள் ஊராட்சி தலைவர்

பணம் செலுத்துபவரின் கையொப்பம் வரிவசூலிப்பவர் T.L. தயாளன்

தம்மனூர் ஊராட்சி

குறிப்பு :

1. இந்த பற்றுச்சீட்டு ஊராட்சி தலைவரின் Facsimile - யும் மற்றும் வரி வசூலிப்பவரின் கையொப்பமும் இருந்தால் தான் செல்லுபடியாகும்.

2. பணம் செலுத்துபவரின் கையொப்பம் தவறாது பெறப்பட வேண்டும். இடதுகைபெருவிரல் ரேகை பெறும் இனத்தில் அசல் நகல் இரண்டு ப்ரதிகளிலும் பெறவேண்டும்.

ஊராட்சி மன்றத் தலைவர், தம்மனூர் ஊராட்சி
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை - திரு.T.L.தயாளன்.,

ந.க.எண்.001/2024/ஊ.செ **நாள்.05.03.2024**

பொருள் - மனைப்பிரிவு ஒப்புதல் - காஞ்சிபுரம் மாவட்டம் - காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் - தம்மனூர் ஊராட்சி மற்றும் கிராமம் - சர்வே எண்.427/1C3-ல் மொத்த பரப்பளவு 2.00 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உத்தேச மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில் நுட்ப ஒப்புதல் பெறப்பட்டுள்ளது (Layout) வரைபடத்திற்கு SWP/D.DTCP/KANCHIPURAM-LAYOUT NO:24/2024 என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளித்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது - மனைப்பிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 46 மனைகளை விற்பனை செய்ய இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடுதல்.

பார்வை -
1. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர், காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண். 22N3G0SK/2024/TCP நாள்.27.02.2024
2. தம்மனூர் ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.67 நாள்.05.03.2024
3. மனுதாரர் திரு.P.வெங்கடேஷ்குமார், எண்.15/49. திருநகர், 12வது தெரு, வில்லிவாக்கம், சென்னை-49 என்பவரின் விண்ணப்பம்

******

உத்தரவு :-

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், தம்மனூர் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்.427/1C3-ல் மொத்த பரப்பளவு 2.00 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/D.DTCP/KANCHIPURAM-LAYOUT NO:24/2024 என எண்ணிடப்பட்டு மனைபிரிவு வரைபடத்திற்கு தொழில் நுட்ப அனுமதி (Technical Sanction) மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர், காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்தின் வாயிலாக பெறப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தில் தெரிவித்துள்ளபடி, பொது உபயோகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது, அனைத்து சாலைகள் மற்றும் மூலை முடுக்குகள் தம்மனூர் ஊராட்சியின் பெயரில் பத்திர பதிவு செய்யப்பட்டு தான பத்திரம் எண்.750/2024 நாள்.09.02.2024-ன்படி பத்திரப் பதிவு செய்யப்பட்டு பெறப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து, பார்வை 1-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர், காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்தில் தொழில் நுட்ப அனுமதி (Technical Sanction) வழங்கப்பட்ட மனைபிரிவு வரைபடத்திற்கு SWP/D.DTCP/KANCHIPURAM-LAYOUT NO:24/2024 என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதாலும், கிராம ஊராட்சிக்கு வளர்ச்சி கட்டணம் பெறப்பட்டதன் அடிப்படையிலும் மேற்படி மனைபிரிவில் அங்கிகரிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 46 மனைகளை விற்பனை செய்திட ஊராட்சி மன்ற தீர்மானம் எண்.67, நாள்.05.03.2024-ன்படி கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு தம்மனூர் கிராம ஊராட்சியின் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

//நிபந்தனைகள்//

- நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என கண்டறியபட்டால் (அ) மனைபிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைபிரிவிற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் ரத்து செய்யப்படும்.
- சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், மனுதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய கிராம ஊராட்சி பொருத்தமான அமைப்பு அல்ல.
- நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதல் இன்றி செய்தல் கூடாது.
- ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட திறந்த வெளி ஒதுக்கீட்டு இடம் (OSR) மனைப்பிரிவு ஒப்புதல் பெறும் நபரோ அல்லது வேறு நபர்களோ விற்பனை செய்ய முயற்சித்தால் அவர்கள்மீது குற்றிவியல் நடவடிக்கை தொடரப்படுவதோடு நிலத்தை பறிமுதல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- 9.00 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00 மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் அமைக்கப்படவேண்டும
- மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர், காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண். 22N3G0SK/2024/TCP நாள்.27.02.2024-ல் தெரிவித்துள்ள மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது கண்டிப்பாக மனுதாரர் பின்பற்றவேண்டும்.
- மேற்கண்ட வீட்டு மனைபிரிவில் உள்ள வீட்டுமனைகள் விற்பனை செய்ய மட்டுமே இவ்வுத்தரவு பொருந்தும். கட்டிட அனுமதிக்கு பொருந்தாது என மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.
- இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (Splay) அமைக்கப்படவேண்டும்.
- தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் 6 அடி X 4 அடி அளவுக்கு குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்படவேண்டும்.

ஊராட்சி மன்றத் தலைவர்,
தம்மனூர் ஊராட்சி
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்

திரு.P.வெங்கடேஷ்குமார்,
எண்.15/49. திருநகர், 12வது தெரு,
வில்லிவாக்கம், சென்னை-49.

நகல் - மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்(பொ), காஞ்சிபுரம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் - சார்பதிவாளர், வாலாஜாபாத் அவர்களுக்கு மனைகள் பத்திரபதிவு செய்ய அனுமதி செய்யும் பொருட்டு அனுப்பப்படுகிறது.

நகல் - வட்டாட்சியர், வாலாஜாபாத் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

நகல் - The Chairman, Tamilnadu Real Estate Rugularity Authority,
No.1A.CMDA Tower II, 1st Floor, Gandhi Irwin Road, Egmore, Chennai – 8.

நகல் - ஊராட்சி செயலர், தம்மனூர் ஊராட்சி.

தீர்மான நகல்

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம், தம்மனூர் ஊராட்சியில் 04.03.2024 தேதியன்று திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு ஊராட்சி மன்றத் தலைவர் **திரு.T.L.தயாளன்** அவர்களின் தலைமையில் ஊராட்சி மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் விவரம் பின்வருமாறு

பொருள் எண்.67

தம்மனூர் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்.427/1C3-ல் மொத்த பரப்பளவு 2.00 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உத்தேச மனைப்பிரிவு வரைபடத்திற்கு தொழில் நுட்ப ஒப்புதல் பெறப்பட்டுள்ளது (Layout) வரைபடத்திற்கு SWP/D.DTCP/KANCHIPURAM-LAYOUT NO:24/2024 என எண்ணிடப்பட்டு அங்கீகாரம் அளித்து மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், காஞ்சிபுரம் அவர்களின் கடிதத்தில் அனுமதி பெறப்பட்டு தொழில் நுட்ப அனுமதி (Techical Sanction) கடித ந.க.எண். 22N3G0SK/2024/TCP நாள்.27.02.2024-ம் நாளிட்ட கடிதத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேற்படி அதனை தொடர்ந்து ஒப்புதல் அளிக்கப்பட்ட Blue Print வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொது உபயோகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது, அனைத்து சாலைகள் மற்றும் மூலை முடுக்குகள் தம்மனூர் ஊராட்சியின் பெயரில் பத்திர பதிவு செய்யப்பட்டு தான பத்திரம் எண்.750/2024 நாள்.09.02.2024-ன்படி பெறப்பட்டதன் அடிப்படையிலும், மேற்படி மனைப்பிரிவில் (Layout) அமைந்துள்ள **46** மனைகள் விற்பனை செய்ய ஊராட்சி மன்றம் இறுதி ஒப்புதல் வழங்க கோருதல்.

தீர்மானம் எண். 67

தம்மனூர் ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்.427/1C3-ல் மொத்த பரப்பளவு 2.00 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவில் (Layout) ஒதுக்கீடு செய்யப்பட்ட **46** மனைகள் விற்பனை செய்ய இறுதி ஒப்புதல் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

T.L.தயாளன்

ஊராட்சி மன்றத் தலைவர்,
தம்மனூர் ஊராட்சி
காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம்.